# ஆதி மார்க்க னீதி மொழி

August 2023

இதழ் 25 – ஆகஸ்ட் மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர நிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்ஙல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் நோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழியின் 25ஆம் இதழாக மலர்ந்துள்ள மின்னணு சஞ்சிகை இன்னும் மலர்ந்து வரும் காலமெல்லாம் அது தனதிடத்தடக்கி திரட்டி வரும் நித்திய செய்தி ஒன்று உள்ளது. மனிதர்களை மகான்களாக்கும் அருந்தவ மந்திர ஆராதனைகள் யாவும் உள்ளடக்கி பேசப் பெற்றதே அலிபு-லாம்-மீம். இது மனிதனிடத்தில் இப்படித்தான் இருக்கிறது என வந்த வந்த பெரியோர்களும் வேதங்களும் அறைகூவி அழைத்தாலும், அதனை நினைவில் நிறுத்துவதே இம் மின்னணு சஞ்சிகையின் நோக்கமாக உள்ளது. நன்மக்கள் இதனை ஊன்றி கவனிக்குமிடத்து இதன் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பு எப்படி விளங்கி துலங்குகிறது என்பதை அறியலாம்.

ஆடி மாதத்தின் சிறப்புடன், பௌர்ணமி அமாவாசையின் சிறப்புகளும், சத்திய வேதம், திருக்கொரல், அழகணி சித்தர், வள்ளலார், பகவத் கீதை, கைலாய கம்பளி சட்டை நாயனார் பாடல்களின் சிறப்புகளும் நன்மக்களால் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன. இவற்றின் மொத்த பிழிவாக அதனுள் இருக்கும் ஒரே செயல் ஆன்மா லயமாகி **ஆலயம் புகுதல் அழிவிலா வாழ்வு** எனும் மரணமிலாப் பெருவாழ்வாகிய அடினாதம் ஒன்றே. பல அரிய தகவல்களுடன், இரு பாலராகிய நன்மக்கள் தொகுத்து வழங்கும் இச் சஞ்சிகையின் சொற்கடங்கா உழைப்புக்கு என் பாராட்டுகளும் ஆசீர்பாதமும் என்றென்றும் உண்டு. இதனை ஊன்றி கவனித்து படிக்கும் மக்களுக்கும் ஒரு பலனானது உண்டு என்பதை ஆண்டவர்கள் அருளிய தெய்வத்தேடு கூடகத்தின் வாயிலாக நாம் பகிர்ந்து கொண்டு இருக்கிறோம். மேலும் உற்றெழுத்து உணர்த்தல் எனும் வேதத் தேடுதலுடன் நம் அறிவு துலக்கத்திற்கான ஒரு சிறப்பம்சமும் பொதிந்து வரும் இச்சஞ்சிகையை மக்கள் யாவரும் பார்த்து படித்து பலன் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

**சாலை ரவி**

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*தேவ முகத்திற்குப் பாத்திரமானவர்கள் னாம், னமக்கு னிச்சயம் ஆபத்தில்லை, னாம் இதில் னிறையப் பற்று வைத்திருக்கிறோம், னமக்கொரு குறைவில்லை என்று னினைத்துக் கொண்டிருந்து, சிலர் கடைசியில் ஆபத்துக்குள் மாட்டிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில் தங்கள் சௌகரியப் பாட்டிலேயே அவர்கள் மனம் சதா ஒட்டியிருக்க, வாயும் உடலும்தான் இதில் ஒட்டியிருக்கிறது. இறுதி சமயத்தில் னஜீஸ் ஆகிய னரகத்தில்தான் அம் மனம் போய்ச் சேரும். இவ்வாறு பழகிப் பலகோடி செவிகளும் பலகோடி வாய்களும் பலகோடி கண்ஙளும் பலகோடி மூக்குகளும் பலகோடி முகஙளும் பலகோடி கால்களும் பலகோடி கைகளும் படைத்துக் கொண்ட அந்ந மனம், ஒரே காலாக, ஒரே செவியாக, ஒரே முகமாக ஆகி, சுவர்க்கத் திருவாயிலாகிய அந்ந சன்னத்தில் னுழையாது. இப்படிச் சொல்லிக் காட்டினால் விளஙாதென்றே, காலமெல்லாம் பலவிதமான ஆசாரம் அனுஷ்டானம் என்ற செயல்களில் புகுத்துவது, இவனுடைய மனத்தைச் சௌகரியத்தில் ஒட்டாதடிக்கவே ஆகும்.*

*இன்னும் எத்தனையோ மந்நிர ஜெபஙள், ஆலயஙள், தீர்த்தஙள், யாத்திரைகள் முதலியவை வைக்கப்பட்டதும் அம் மனத்தைச் சௌகரியத்தினின்றும் கழற்றவே. அப்படிக் கழற்றப் பெற்ற ஒருவன், இந்ந உலகத்தில் எவ்வளவு கஷ்ட ஜீவனம் செய்தாலும், முடிவாகிய தன்னுடைய ஜீவ வாழ்வு வேலையில் ஜெயமடைவான். ஆனால் மனமானது சௌகரியத்தையே னாடி னின்றால், கடைசியில் அது மாமிசமாகிய னரகத்திலே மாட்டிக் கொள்ளும். கடைசியில் போய் ஒட்டிக் கொள்ளலாமென்றிருப்பான்; ஆனால், ஒரு ஜீவன் முத்தரே கச்சைகட்டி முயற்சி செய்தாலும், பிடுஙு முடியாத ஒரு எல்லையில், ஒரு சகதியில் மாட்டிக்கொண்டு னிற்பான். இது என் கையேட்டு அனுபவம். இது வேதத்தில் இருந்நாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இதுவே உண்மை. சௌகரியத்தைக் கழற்றி னின்றால்தான், எண்ணிறந்ந தேவ முகஙள், எண்ணிறந்ந தேவேச முகஙள், எண்ணிறந்ந பூத முகஙள், எண்ணிறந்ந பறவை முகஙள், எண்ணிறந்ந மிருக முகஙள், எண்ணிறந்ந னஞ்சு முகஙளாகிய அத்தனை கோடா கோடியான முகஙளைத் தட்டிவிட்டு, அந்நத் தேவ சைதன்யரின் திருமுகத்திற்கு னேர் இலக்காக னிற்க முடியும். ஆகவே எப்பொழுதும் இதிலே (இந்ந மெய் வாழ்விலே) உஜார் வேண்டும். சௌகரியம் சகதிக்கடல். மேல் ஏறிக்கொண்டு இருப்பது போலே தோன்றும், ஆனால் கீழே படுகுழிக்கு இழுத்துக் கொண்டே சென்றுகொண்டிருக்கும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*


Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 ஜூலை மாத அவை நிகழ்வுகள் – 2023 ஆகஸ்ட் மாத வெளியீடு

**02-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**
**பௌர்ணமி சிறப்பு சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரான் அருளமுதம் :**

**தரங்கு புராதன னுரங்குமே காட்சரமாம்...** என்ற பூரணப் புதையல் பாடலுடன் பௌர்ணமி தின சிறப்பு அவை இனிதே மலர்ந்தது. ஜீவ சுயராஜ்ஜியத்துடன், ஜீவேசத்தகை வாழ்விற்குரிய னித்திய பொருளாகிய அறிவு மாணிக்கத்தை வழங்கி னம் தலையை காக்கும் செயலே தர்மம். **உலகத்தலைந்தும் உயிரை அறியார்க்கு உயிரினைக் காட்டுவார் உலக மெய்க்குருபரன்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி, அறிவு வடிவான பெரியோர்களின் வாய்மைக்குள் ஆகி, உயிரின் இரகசியம் அறிந்து ஒழுக்க னெறியுடன் வாழ்பவர்களே உலக மக்களுக்கு தர்மம் அளக்கும் தகுதி பெற்று ஒளியாய் திகழ்கிறார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன் :*

**இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்**
**ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்**
**தாரத்தின் நன்று தனி.**

என்ற ஔவையார் வாக்கின்படி உயர் குலமாயினும், ஒழுக்கம் இல்லையேல் குலத்திற்கே அவகேடாம். மெய்குருவை அடைந்து உயிர் வீணாகாமல் காக்கும் செயல் பெற்றவர்களே உயர்குடியில் பிறந்தவர்கள் என்கிறது வேதம். வள்ளல் பிரான் அருளிய நான்கு வகை ஒழுக்கத்தில் **இந்திரிய ஒழுக்கம்** - ஞானேந்திரியங்களை னெறி பட வைத்திருத்தல். **கரண ஒழுக்கம்** - அந்தகரணத்தை நிலை பெற செய்தல். **ஜீவ ஒழுக்கம்** - மனம் அலையாமல் பாதுகாக்கும் அறம் மூலம் ஜீவனை அறிதல். **ஆன்ம ஒழுக்கம்** - ஜீவன் சிவமாகி பெருவாழ்வு பெறுதல் என்பதாம்.

*ஜீவசகோதரர் வடிவேலன் :* உயிருக்கு மேலான பொருளாகவும் நன்றிக்கு வித்தாகவும் இருப்பதே நல்லொழுக்கமாகும். நால்வகை யோனி எழுவகை தோற்றத்தில், இறைவன் வகுத்த ஒழுக்கத்தில், ஓரறிவு முதல் ஐயறிவு வரை தன் கடமை தவறாது இடம்-இரை-இணை இம் மூன்றினுள் தான் வாழ்கிறது. ஆனால் அறிவில் மேம்பட்ட மனிதன் வெறி கொண்ட வீணறிவு படிப்பால் ஒழுக்க னெறி தவறுகிறான். இச்செயலை ஆண்டவர்கள் தனித்திருப்பாடலில், **தருக்கினம் புள்ளூர் காலி ஜலம் வாழ் ஜெந்தும் தான் பிறந்த வதன் கடமை முடித்து னிற்க...** என அருளியுள்ளார்கள். மனிதன் ஒழுக்கத்தை கடைபிடித்து, ஆன்ம லாபம் பெறவே, பெரியோர்கள் கோவில்களும், சடங்கு சம்பிரதாயங்களும் உண்டாக்கி வைத்துள்ளனர். ஒழுக்கத்திற்கு தடையாய் இருக்கும் மும்மலத்தை நீக்கும் ஆசானின் னாதமே ஒழுக்கத்திற்கான வித்தாகும். வள்ளல்பிரான் அருளிய படி, சிற்சபையின் கண்ணே பார்வையை னிறுத்திப் பார்க்கும் ஒழுக்க னெறியை, தன்னையறிந்த பெரியோர்களின் னாதமாகிய வித்தில்லா வித்தின் மூலம் அறிந்து அடைந்தவர்களே வேத சட்டத்தின் படி வாழ்ந்து, மரணமிலாப் பெருவாழ்வு பெற்று, அன்னாட்டிற்குரிய வித்தாக மாற்றப் பெறுகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

அன்பும் சிவமும் ஒன்றே; ஒழுக்கமும் உயிரும் ஒன்றே என்பதை தன்னுள் அறிந்து அடைவதே மெய்ஞானம் என ஆசான் அருளிச் செய்து அவையை னிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**06-07-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் அருளிய **மாயக் கூத்தின்வ கையறி யாமல்யான்...** என்ற தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது. பிறவி சுழல் என்ற மாயக் கூத்தில் விளைந்ததே காயமெனும் அழிவுடலாகிய இத்தேகம். இதிலிருந்து மாறுவதற்கான ஞான அறிவைப் புகட்டுபவரே மெய்ஆசான்.

**வான்மதிக் கொரல் - வாக்கியம் எண் 117:** மக்கள் அசலான மெய் வணக்கம் அறியாது நகல் வணக்கமே செய்து வாழ்நாள் வீண் போக்குகின்றனர். சாலை என்ற இந்த எல்லையே மெய் வணக்கத்திற்குரிய இடமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** பெரியோர்களை மறுதலித்த மக்கள் அவர்களின் சாபத்தால் வேல்குத்திக் கொண்டும் பாத யாத்திரை என்றும் தானே துன்புறுகின்றனர். வேல், சேவல், மயில் எனும் இறை சன்னதங்களை அகமியத்தில் கண்ட மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் – 8. அன்புடைமை:** வெளிஅன்பு அனித்தியமும், உள்அன்பு னித்தியமும் தருவதாக உள்ளது. ஒருவன் தன் மெய்ஞ்ஞான ஆசரியரிடம் சர்வமும் அவருக்குத் தெரியும் என்ற எண்ணத்துடன் னடப்பதுவே முக்தி தேகம் பெறுவதற்கான ஒரே வழி. சிவகுரு வரதராகிய ஆசானிடம் வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கும். சைவத்தின் தலையாக அன்பே சிவம் என்பது உள்ளது.

1) ஆசான் அருளால் உயிர் நிலை உணர்ந்த சீடனுக்கே ஆனந்த கண்ணீர் வரும்.
2) ஆசானிடம் உடல்-பொருள்-ஆவி தத்தம் செய்தே அன்பின் ரகசியம் அறிய முடியும்.
3) அன்பே உருவான ஆசானே இக்கடம் விட்டு நம்மை அக்கடத்தில் ஏற்றி எமனிடமிருந்து மீட்கிறார்கள்.
4) ஆசான் அருளன்றி அன்பே ஈசன், ஜீவன், சிவன் என யாரும் அறிகிலர் என்கிறார் திருமூலர்.
5) அன்பே உருவான ஆசான் அருளால் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வு வாழலாம்.
6) அறம் அறியாதவனை மறவழியில் இருந்து அறவழியில் ஆக்குவது ஆசான் அன்பு ஒன்றே.
7) ஆசான் தன் அன்பின் மூலம் அறத்தை போதித்து என்புதோல் வாழ்க்கைப் பிடியிலிருந்து நம்மை மீட்கிறார்கள்.
8) அகம் சார்ந்த அன்பே உயிர் வாழ்வின் ரகசியமாக உள்ளது.
9) அழி உடலின் அகப்புற செயல்களை ஆசான் அருளால் அறிந்து அகத்தில் அன்புற்று வாழ்வதே மெய் வாழ்வு.
10) மனம் உயர் நிலையடைய ஆசான் அருள்வது அன்பின் வழியே.

**குருபிரான் அருளமுதம்:** மெய்ஞானத்தின் அடினாதம் அன்பு. அன்பில்லாத உயிரில்லை. தன்னலம் பாராது யாவரும் பேரின்பம் அனுபவிக்க சித்தமலம் அறுத்து சிவமாக்குவதே ஆசான் அன்பு. **அன்பில்லாத உள்ளம் மயானம்** என்கிறார் கபீர்தாசர். எல்லாச் சீர் சிறப்பும், சர்வ வலதும் ஆண்மையும், கல்வி கலை கண்காட்சியும் தருகின்ற அன்புடைய உயிர் என்கிறார்கள் சாலை ஆண்டவர்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் பாடல் எண்-21 சாயச் சரக்கெடுத்தே சாதிலிங்கம் தான்சேர்த்து...** அறிவு தேகத்தை சாதிலிங்கம், பஞ்சாட்சரம் என்றும் தூல உடலை சாய சரக்கு என்றும் சித்தர் கூறுவதனை, சாலை ஆண்டவர்கள் ஆதி, அனாதி, சோதி அடி-னடு-முடி, அண்டம் பிண்டம், சாதிலிங்ஙம் சஞ்ஜீவி கஞ்ஞா எனவும் அருளியுள்ளார்கள். அழி உடலை சதமென நம்பி வாழ்வோர் அலகை தேகமெடுப்பர். ஜெகத்து மக்களின் புருவத்திடை நெற்றியில் அழியாத விபூதி பூசி, ஜீவ வாழ்வில் சுகம் நல்கும் வைத்திய னாத மருந்தை அருளும் கண்ணம்மாவாகிய ஆசானை பணிகிறேன்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம் - தெய்வத் தேடு கூடகம்:** சரிகத் ஒழுக்கமே சீர்கெட்டு, விலங்கு, புள், ஊர்வன, தோற்றத்தில் உலக மக்கள் உள்ளனர். அப்படியான கோகுலங்களாகிய உலக மக்களை மேய்த்து, அவர்களின் விஷ மனதை அறிவாக மாற்றி நல்வழியில் தேற்ற வந்தவரே கோகுலர் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**08-07-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

தனித்த னற்றலைமைப் பெரும்பதியரசரின் **எண்ணுகின்ற னல்லெண்ண மனைத்தையும் ...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர் :* பண்ணாகி அருங்ஙமுதம் பொழியும் ஞானசித்தரான குருபிரானின் னாதம் வரும் வசந்த காலமே, நம் எண்ணங்கள் யாவற்றையும் மேல் நோக்கமாகவும், அலைபாயும் மனதை அலைவற்று அறிவாகவும் மாறச் செய்கிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 133 :** எமனுடைய அச்சம், அதிகாரம் கடந்து அவனுடைய அரசை மிதித்து வெற்றி கண்டு நிற்கும் திறமே சுதந்திரம். ஐம்புலத் தலைவனான அழி பாதக மனமெனும் எமனால் வீணாகும் காலத்தை ஆசான் அருளிய **சு** எனும் மந்திரத்தால் வீணாகாமல் காக்கும் தன் திறமே சுதந்திரம்.



**குருபிரான் அருளமுதம் :**

புலன் பொறிகளுக்கு அடிமையான இவ்வுடலுக்கு எமனின் அதிகாரம் உண்டு. **மந்ரகி ரிமலையில் எந்ரவுச் சியிடமாய் தந்ரமு டனேயேறச் சந்ரன்பி ரகாசம்பார் (பத்தியத்திடம்).** எமனுடைய அரசை வெற்றி கொள்ளும் தந்திரமான உபாயத்தை ஆசானிடம் பெற்று, சந்திரப் பிரகாசமான அறிவுப் பிரகாசத்துடன், இத்தேகம் கடந்த எமனச்சமற்ற சூக்குமதேகத்தில் குடியேறி வாழ்வதே ஜீவ சுதந்திரமாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் - யோவான் சுவிசேஷம்**
**அதிகாரம் - 12 (49-50) :** *நான் பேசுவது உபதேசிப்பது யாவும் என்னை அனுப்பின பிதாவாகிய நித்திய ஜீவனின் கட்டளை ஆதலால் அதன்படியே பேசுகிறேன் என்றார்.*

ஞான பிதாவாகிய குருபிரான் கருணையால் நம்மை தன் அங்கத்தில் ஒருவனாக ஆக்கி நம் சிரசிலுள்ள நித்திய ஜீவன் குறித்த சாட்சியை அருளும் போது, அதன் மேல் நாம் வைக்கும் விசுவாசமே, நம் ஜீவன் நஷ்டம் அடையாது காக்கிறது. வேத வாக்குகளைப் பேசும்போது நம் நாவை உபயோகித்து அதிலிருந்து ஆண்டவர்களே அருள்கிறார்கள் என்பதே இத்திருவசனம் கூறும் கருத்தாகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத் கீதை: ராஜ-வித்யா – ராஜ-குஹ்ய யோகம்.**

ராஜ அங்கத்தில் ராஜ வித்தையான பிரம்மவித்தை பழகுவதே ராஜயோகம். பஞ்சபூதமும் கடந்த ஈசானிய தத்துவத்தை உணர்வதே தன்னை அறிதல். ஈசனாக வரும் குருபிரான் துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்ற ஈசான்ய தத்துவங்களையும், உயிர்களிடத்து பிரம்மத்தின் சம நிலையையும் அருள்கிறார்கள். **தூய மனதுடன் இலை, மலர், கனி, நீர் படைத்து அர்ப்பணிக்கும் பக்தனுக்கு நான் அருள்கிறேன் (பகவான்).** ஆலிலையில் பள்ளிகொண்ட கண்ணனை விழிமலர் கண்டு அர்ச்சித்து மூலப் பழம்பண் ஆரமணி எனும் ஞானக்கனி பெற்று மனதைத் தூய நீராக்கி சரணாகதி அடைபவனுக்கு மோன நிலையை அருள்கிறேன் என்பதாகும்.



Copyright © AMNA Trust, Chennai August 2023

**குருபிரான் அருளமுதம்:**

இருதயம் விளங்க இறைகுருவைத் தேடிச் சரணடைந்து, இருதயத்தில் ஐந்துவிதக் கலப்பான பஞ்சபூதமும் கடந்து மனிதனை பிரகாசிக்கச் செய்யும் பிரம்ம ஆவியெனும் மெய்யான ஒளியான ஆன்மப் பிரகாசத்தை, வேத சாட்சி வைத்துப் பெறும் மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் உள்ளனர்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கயிலாய கம்பளிச்சட்டை நாயனார் - முன் ஞானம் - பாடல் எண் 5: பாழான மாய்கை சென்றொழிவதெப்போ?...** மெய்ஞானம் அடைய விடாது தடுத்து, மாயப் பெண்ணாக வந்து மறதியில் ஆக்கி மறலி வசம் சேர்க்கும் மாயப் பெண் எனும் நபுசான மனதை, ஆசானின் ஞானச்சுடர் னாதமே, வட்டமிட்ட மாய்கை எனும் முள்ளுக்காட்டை எரித்து சிபத்தான அறிவாக்கி மாயை மறலியின் கையில் சிக்காமல் காக்கிறது.

**குருபிரான் அருளமுதம்:**

குருவானவர் தன் ஆசான் முன் உரைத்தது முன் ஞானமாகவும், ஆசான் தன் சீடர்களுக்கு உரைத்தது பின் ஞானமாகவும் உள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவு ஒன்றேயாகும். மாயையின் தோற்றமான உடலை **தான்** என நினைக்கும் பேதை குணமே பெண்ணாகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்* : **செய்தித் தொடர்பில் மனித பரிணாம வளர்ச்சி:** இதனை சாலை ஆண்டவர்கள், **சமிக்ஞை முதலாவதாகிய பாஷையில் னின்றும் சகல பாஷைகளையும் படைத்தான்** என ஒரே வரியில் அருளியுள்ளார்கள். சமிக்ஞை, புகை, முரசு, மணி, பலவர்ணக்கொடி, எழுத்து, ஓலைச்சுவடி, துணி, காகிதம், கடிதம், செய்தித்தாள் மூலம் தகவல் தொடர்புகளையும், மின்காந்த அலைகளால் தந்தி, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, கைபேசி, கணினி, காணொளி என அறிவின் உயர்ச்சியால் பலவித தகவல் தொடர்பு பரிணாம வளர்ச்சி கண்டான்.

*ஜீவசகோதரி சரஸ்பதி வண்ணன்:* **நீதி மொழிச் சிறுகதை:** குரு, தன் சீடர்களுக்கு பொங்கல் அமுதை தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, இரும்பு, பஞ்சலோகம், பாக்கு மட்டை, வாழை இலை என பலவேறு பாத்திரத்தில் வழங்கியதும், அமுதின் சுவை உணராது, அவரவர் மனநிலைக்கு ஏற்ப பாத்திரத்தையே மேன்மையாகக் கருதினர். மெய்க் குருவானவர் தாயின்மிக்காங் கருணையுடன் வழங்கும் அருளமுதத்தை உண்டு, இடருறும் இறுதி நாளில் புகழுடம்பில் தேறி ஏறிப் பொங்கும் மகிழ்ச்சியே மகிழ்ச்சிப் பொங்கல். இம் மெய்ச் செயலை உணரும் சற்புத்திரனே மேன்மை பெறுகிறான்.

**குருபிரான் அருளமுதம்:**

ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள், தான் பெற்ற மெய்ஞான இன்பொருளின் ரகசியத்தை வேத சாட்சி வைத்தே பகிர்கிறார்கள். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பிரம்மத்தை வைத்தே வேதமும், தேகமும், கோவில்களும் உள்ளன. **மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம், சிதம்பரம், சதாசிவம், திருக்கூத்து** என திருமூலர் அருளிய நிலைகள் யாவும் மனிதனின் தலைக்குள் நின்று விளங்கும் பாரப் பெரிய ரகசியமாகும். இதனை செயலாக மக்களிடம் ஆக்கி வைக்கின்ற அவையாக ஆதி மார்க்க னீதி அவை திகழ்கிறது என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**09-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அறுவகை சமயத்தோர்க்கும் அறிவுரை தெய்வமாகி...** என்ற திருப்பாடலுடன் அவை மலர்ந்நது.

*ஜீவசகோதரர் கௌதம்:* காவடி என்பது நம்மை காக்கும் திருவடியாகவும் அதற்கான சடங்குகள், காப்பு கட்டுதல் என்பன ஒழுக்க நெறியில் நாம் வாழ உண்டாக்கப் பெற்றதாகும். ஒரு மெய் ஆசானின் தனிப்பெருங்கருணையே நம்மை நிஜமான திருவடி சேர்ப்பிக்கும்.



Copyright © AMNA Trust, Chennai

புறஉலக நகல் சடங்கின் உண்மை உணரவும் இப்பிறவி எடுத்ததின் பலன் அறியவும், வேதங்ஙளின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பை உள்ளத்தில் உரிமையுற எடுத்து உரைக்கவும் வந்த வேதமே, ஆசான். **வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் மயில் குயிலாச்சுதடி** என வள்ளலார், குருவருளால் மனமெனும் மயில் அறிவெனும் குயிலாக மாறியதையே அருளியுள்ளார். சர்வத்தையும் உண்டாக்கிய பிரம்மத்தை தன்னுள் அறியவே அரிய பிறப்பான மனுவுக்கு ஆறாவது அறிவெனும் தனிச் சீதனம் இறைவனால் வழங்கப் பெற்றுள்ளது. மனம் செம்மையானபின் தான், அவரவர் ஜீவகுகை தோறும் வீற்றிருக்கும் மாசு மறுவிலா குகனை தரிசிக்க முடியும். பேசரும் பெரும் பொருளை பேசரும் வாசகங் கொண்டு பேசியளிக்கின்ற குரு பெருமானின் தனிப்பெருங்கருணை கொண்டே ஜீவாத்மாவை அறிந்து பரமாத்ம நிலை அடைய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:**

**தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே - ஒரு**
**தந்நிரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே**

**நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - அங்கே**
**னானும் வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.** **(திரு அருட்பா)**

பிறப்பெடுத்ததின் காரணம் தன்னையறியவே. மாற்றமுடைய பொய்யுடம்பினுள் மாறாதிருக்கும் மெய்யான இறைவனை அறிவதே தன்னையறியும் இன்பமாகும். இறைவனின் னாமமே அவரவரின் னாமமாக வெளிச்சப் பொருளாக, கடவுளாக, ஜீவனாக, வாசனை கேள்வி இரு கண் வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் ஃ கண்ணாக, ஆறாவது அறிவாக, மனமாக இருக்கிறது. னினைவென்னும் ஆகாயத்தில் இருக்கும் சொர்க்கம் நரகம் உடலுள்ள போதே அறிய வேண்டும் என்பதனை அறிந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அசைவற்று அறிவு நிலையில் இருக்கும் மனமே பிரம்மம். தன்னை அறியும் ஆறாவது அறிவே, ஓரறிவாகிய இறைவனை அறிவதற்கென மனுவுக்கு சீதனமாக இறைவனால் வழங்கப் பெற்றுள்ளது. ஒரு மெய் ஆசானின் இரக்கத்தால் அழிவுடல் ஆசை விட்டு அழியாப்பதி குடியேறி வாழ வந்தவனே மனு என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

**13-07-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பூர்ணிமா ஜீவானந்தம்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **வான வேதாந்த சஞ்ஞீவி குரு வள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்ஞீவி** என்ற திருப்பாடலுடன் அவை மலர்ந்தது. அவரவரின் ஜீவனைப் பற்றிய ரகசியமே தீர்க்க தரிசனம். தன் ஜீவன் மீது வைக்கும் அன்பே ஜீவகாருண்யம். மும்மலத்தினால் உண்டாகும் பிறவியெனும் வென்னோய், சுத்த சைதன்ய நாதரின் சொல் ஒரு பொருளினால் தான் விலகும்.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 117:** மக்கள் தன் ஜீவ குகையில் வீற்றிருக்கும் மறுவிலாக் குகனை வணங்காமல் புற வணக்கத்தில் சாம்பலை விபூதி எனப் பூசி தன் வாழ்நாளை வீண் ஆக்குகின்றனர். முருகப் பெருமான் வந்த காலத்தில் அவர் அருளியதை அறியாமல் நகல் வழிபாட்டில் வாழ்நாளை போக்கும் அறிவிலிகள் மனுக்கள் அல்ல. அறிவை பெற்றவர்கள் முன்னிலையில் செல்லும் போதே நம் அறியாமை அகல்கிறது. தன்னை அறியும் சாஸ்திர

*வாக்கு மனதுகளுக்கு அதீதகோசரராயும், வெண்மை செம்மைப் பிரபைகளுக்கு அபின்னமாயும், சிவசக்தி சொரூபமாயும், மேலானதாயுமுள்ள குருவின் திருவடிகளிரண்டினையும் னமஸ்கரிக்கிறேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai  August 2023

அறிவு மனு ஒருவனுக்கே உண்டு. ஞானிகள் உண்டாக்கிய மதங்கள் மக்கள் வாழ்வதற்கே. ஒரு மெய்க் குருவின் வாய்மையே, மார்க்கம் காட்டும் திசையாக உள்ளது. ஆசான் அருளால் அறிவு நிலை பெற்றவர்களே விழிப்பு நிலை அடைகிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் – 9. விருந்தோம்பல் :** குருபெருமான் அருளும் செவி உணவே விருந்தோம்பல்.

1) **கடவுள் வாழ்த்து :** சர்வத்திற்கும் முதலாகிய அகரம் எனும் ஜீவேசப் பொருளே ஆதியாக, பகவனாக, உலகாக உள்ளது.
2) **வான்சிறப்பு :** ஆசானின் அருள் மழையால், இறைவன் இருக்கும் அசைவற்ற இடத்தை அறிவதே எமன் அணுக முடியாத எல்லை.
3) **நீத்தார் பெருமை :** ஆறாவது அறிவை அறிந்து, புற உலக பற்றற்று ஒழுக்கத்துடன் வாழும் வாழ்க்கையாகும்.
4) **அரண் வலியுறுத்தல் :** மனிதனுக்கு அரண் போல் விளங்கும் ஆறாவது அறிவை அறியவைக்கும் ஆசானின் அருளே விருந்தோம்பல்.
5) **இல்வாழ்க்கை :** அனித்திய புறவாழ்வை விட்டு நித்திய அக வாழ்வில் ஆசான் அருளால் அறம் செய்து வாழும் சிவயோக வாழ்வாகும்.
6) **வாழ்க்கைத் துணைநலம் :** நம் நெடுங்கால நித்திய வளமான வாழ்க்கைக்கு துணையாக வருவது மெய் குருபிரானின் வாய்மையே.
7) **அறிவுள்ள புதல்வரை பெறுதல்:** ஞான பிதாவாக வரும் குருகொண்டல், தன்னை நாடிவரும் மக்களின் அறியாமை அகற்றி அறிவாக மாற்றும் செயல்.
8) **அன்புடைமை :** ஒரு மெய் ஆசானின் அன்பே சிவமாக, கடவுளாக அவர்களின் வாய்மையெனும் விருந்தோம்பலாக உள்ளது. அதைப் பெற்றவர்களே எல்லாம் உடையார்.

**குருபிரான் அருளமுதம்:**

தேகமாகிய இக்கடத்துள் இருக்கும் பொருளே கடவுள். தன் குருவின் ஆசியுடன், ஆசான் தன் அருளால் தன்னை நாடி வந்த சீடர்களின் அகக்கண் திறந்து அறிவுப்பசியை தீர்ப்பதே விருந்தோம்பல். அறிவைப் பெற்றவன் அழிவற்ற பொருளை நாடி, அழியும் பொருளை நீத்தலே நீத்தார் பெருமை. அகம் சார்ந்த இல்லறத்தில் இருக்கும் இறைவனை அறம் மூலம் அறிவதே இல்வாழ்க்கை. மெய் குருபிரானிடம் மெய்யறிவை பெற்ற ஆண் பெண் யாவரும் அவரது புதல்வரே. நமது ஜீவனை சிவநிலைக்கு ஏற்றி வைக்கும் ஆசானின் நிகரற்ற அன்பே அன்புடைமை. பெரியோர்களின் சுத்த நினைவில் உண்டாவதே பரிபாஷை. அவர்களின் வல்லபத்தை அறிவதே தன்னை அறிதல்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் பாடல் எண் : 22 பாதாள மூலியடி பாடாணம் தான்சேர்த்து…** உடல் உயிரின் தத்துவம் உணர்த்தும் இப் பரிபாஷை பாடலுள், உடலாகிய பாதாளத்தில் இருக்கும் உணர்வெனும் கொடி, ஆசான் அருளால் ஏற்றப் பெற்று நம் தேகத்தின் வேத ரகசியம் அறிய வைக்கிறது. நாம் அறியாத அறிவற்ற மனமே வேதாளமாகவும், ஆசான் அருளால் அறியும்போது அதுவே வேதத்தின் ஆழமாகவும் உள்ளது. ஆசான் அருளால் சுயம் பிரகாசமாக விளங்கும் பிரம்மத்தை அறிய வைக்கும் பிரம்மவித்தை செயலே நம் மனதை மேல் நோக்கமாக மாற்றுகிறது.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம் - பக்கம் 223:** குருவருளால் அகத்தில் இருக்கும் இறைவன நோக்கி பயணிக்கும் செயலே தெய்வத்தேடு கூடகம். உலகெங்கும் தெரியக்கூடிய கொடி என்பது, நம் அக உலகை அறிவிக்கும் ஆசானின் அருள் வர்ஷிப்பே என்பதை மனமெனும் மாயத்திரை விலகியோரே அறிவர். யுகம்தோறும் வரும் குருகொண்டலை தேடி அடைவதுவே மனிதனின் தலையாய கடமை என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**15-07-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபெருமான் அருளமுதம் :**
**தாகமும் தணியான் தன்னுயிர றியா...** என்ற ஞானமுறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 134** உன் சுவாசம் வெளியே ஓடாமல் மூக்களவே ஓடினால் அது தான் தவம். தன் சுவாசம் அதிகம் ஓடாமல் நாளுக்கு நாள் உள்ளடங்கி ஓடுவதைக் கற்கும் கல்வியே சாகாக் கல்வி. சாலை ஆண்டவர்கள் அருளியிருக்கும் ஆணி மொழி தெய்வத் திருவசன சத்திய செயலானது இன்று ஆதி மார்க்க னீதி அவை அங்கங்களின் செயல் அனுபவமாக உள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - ரோமர் அதிகாரம் எண் : 9 - திருவசனம் - 7 : 8** ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் சந்ததியர் என்பது, மாமிசத்தால் அன்றி தேவனுடைய வாக்குத் தத்தத்தின் படி பிள்ளைகள் ஆனவர்களே. பரிசுத்த ஆவியின் சுவிசேஷ நற்செய்தியே வாக்குதத்தம். **நான்** உன்னை ஒளியாக வைப்பேன், பாதுகாப்பேன், உணர்த்துவேன், ஆசீர்பதிப்பேன், உனக்காக வழக்காடுவேன். உன் பிள்ளைகளை இரட்சித்து உன்னை ஒடுக்கியவரின் மாமிசத்தை அவருக்கே தின்னக் கொடுப்பேன். கர்த்தராகிய **நான்** என்பது குறிக்கும் காரண தேகத்தை மெய்குருவின் மூலம் அறிந்தவர்களே வாக்கு தத்தம் கை கொண்ட தேவனுடைய பிள்ளைகள். பரிசுத்தஆவி ஊதிய ஜீவ சுவாசத்தால் ஜீவாத்மாவாக மாறியவர்களே தேவனுடைய சந்ததிகள் என்பது வேத தீர்ப்பு.

**கலாத்தியர் அதிகாரம் : 5 திருவசனம் : 2 - பவுல் கூறியது.** தன் அகத்தலைவனை அறிவதே விருத்த சேதனம் என்பதை கர்த்தராகிய குருவின் வாக்குத் தத்தமான வாய்மை மூலமே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் கோபிநாத் :* **ஸ்ரீமத் பகவத்கீதை - ஒன்பது யோகங்களின் இரத்தின சுருக்கம் :**

1. **அர்ஜூன விஷாத யோகம் :** குருக்ஷேத்திர போரில் அர்ஜூனனிடமிருந்து காண்டீப வில் நழுவிய நிகழ்வும், பகவான் கிருஷ்ணர் ஊதிய பாஞ்ஞசன்ய சங்கின் இரகசியமும் பொதியப்பெற்ற யோகம்.
2. **ஸாங்கிய யோகம் :** சர்வமும் கிருஷ்ணார்ப்பணம் என அர்ஜுனன் - பகவானிடம் சரணாகதி அடைந்து பயத்தை அபயமாக மாற்றி கொண்ட யோகம்.
3. **கர்ம யோகம் :** பிறவி சூழலில் சிக்க வைக்கும் கன்ம (கர்ம) வினையை கர்ம யோகமாக மாற்றி பிறவாமை பெறவே கர்மம் செய்ய வேண்டும் என பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு விளக்கிய யோகம்.
4. **ஞானகர்ம சன்யாஸ யோகம் :** ஆசானின் அக்னி எனும் வாக்கானது கர்மத்தை அகர்மமாக மாற்றி ஞான கர்மமென்ற பெருநிலையில் ஏற்றி சன்யாசியாக வாழ வைப்பதை உணர்த்தும் யோகம்.
5. **கர்ம சன்யாஸ யோகம் :** தன்னையறியும் அறிவின் மூலம் ஒன்பது வாயில் கடந்து பத்தாவது வாயிலில் வீற்றிருக்கும் இறைவனை அடைவதற்கான உளவுகளை உள்ளடக்கிய உன்னத யோகம்.
6. **ஆத்ம ஸம்யம யோகம் (தியான யோகம்) :** குரு சொன்ன அஷ்டாங்க யோகத்தில் ஆசனமிட்டு அமர்ந்து, அடையும் உயர் னிலையை உணர்த்தும் யோகம்.
7. **ஞான விஞ்ஞான யோகம் :** ஞானத்தில் விஞ்ஞானம் உள்ளதையும், விருப்பு வெறுப்பற்ற சம மனநிலையுடன் இறைபொருளுடன் இரண்டற கலப்பதற்கான உபாயத்தையும் கூறும் யோகம்.
8. **அக்ஷர பிரஹ்ம யோகம் :** குருவருளால் தேகத்தில் ஓரெழுத்தை கண்டு, அதி தெய்வ உடல், அதி பூத உயிர், அதி யக்ஞம ஆன்மா எனும் நிலையறிந்து, அறுந்து போன அட்சரம் மீட்டு, மரணமிலாப் பெரு வாழ்வடைய உணர்த்தும் யோகம்.
9. **ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் :** ஆசான் அருளும் ராஜாங்க யோகத்தால், பஞ்சாட்சரம், பஞ்சபூதம், மனம் இவற்றின் தன்மையறிந்து, தன் எனும் ஜீவகுகையில் வீற்றிருக்கும் ஜீவேசப் பொருளை தரிசிக்கும் தவனிலைகள் பொதிந்துள்ள யோகம்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி ஜீவிதா :* **கைலாயக் கம்பளிச்சட்டை னாயனார் - முன் ஞானம் - பாடல் எண் : 6**
**மூலமதில் ஆறு தலங் கீழே தள்ளி...** ஆறு தலம் எனும் ஆறு ஆதாரம் மனதுடன் சேர்ந்து கீழ் னோக்கி செல்வதை உணர்த்தி மேல் னோக்கமாக மாற்றி வைப்பவரே மெய்குருபிரான். மனிதவுடலை அழிவுப் பாதையில் செலுத்தும் ஏழு மாய சக்திகளையும், ஆசான் தன் னாத வல்லபத்தால் ஞான சத்தியாக மாற்றி, இச்சடம் உள்ள போதே பிறப்பு, இறப்பற்ற மரணமிலாப் பெருவாழ்வை வழங்குகிறார்கள்.

*ஜீவசகோதரி சரஸ்பதி :* வஞ்ஞ புலன் சதியில் சிக்கி தவிக்கும் மனதை ஆசான் இரக்கத்தால் அறிவாக மாற்றி, பேரின்பப் பெருவாழ்வு பெறும் நிலையை புத்தர் தன் சீடர்களுக்கு அருளியது வேத சாட்சியுடன் பகிரப்பெற்றது.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத் தேடு கூடகம் :**
துவார பாலர் : **சாந்நி மூர்த்தியரே யென்றும் ...** கோர கொடூர எமனை சாந்த சொரூபமாக ஆக்கி வைப்பவரே சாந்தி மூர்த்தி. உலகப் பற்றுள்ளோர் வர நாணும் சத்திய நகருக்குள் வந்த னீங்கள் எந்த தேசம் என பிரம்ம கூடகர்களிடம் வினவ,

*பிரம்ம கூடகர் :* சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற நிலைகள், னடுனிலைச் சிறப்பாக விளங்கும் னன்னிலமே எங்கள் கயிலை னாடு என கூறிய பின்,
உங்களது னாட்டின் வளப்பங்களை கூறுங்கள் என துவார பாலர் கேட்க,

*பிரம்ம கூடகர் :* பிறவானெறி எழில் சிந்தும் னாடு, தேங்குறு தவத்தோர் தேடரும் னாடு, ஓங்காரப் பதிக்குடையவர் னாடு, எங்கள் னாடு. பந்நுலாம் பூமிப் பரப்பெலாஞ் துற்றிச் செந்தமிழ் னாட்டில் சேவடி தேடி வந்தோம் எனக் கூற,

*துவார பாலர்:* மந்நிரச் சாலையை தேடி வந்த உங்களுக்கு இது மந்திரச்சாலை என சொன்னது யாரென்றும், மந்நிரச் சாலையின் அடையாளமாகிய இந்நிர முகப்புக்குள் உங்களை கூட்டி கொண்டு வந்தவர்களைப் பற்றியும் கூறும்படி கேட்க, பிரம்ம கூடகர் கூறி வரும் னிலைகளை அவரவர் அகத்துள் தேடி கூட வேண்டும் என ஆசான் அருளிச் செய்து அவையை இனிதே னிறைவு செய்தார்கள்.

**16-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்**

**குருபெருமான் அருளமுதம்:**
**சொல்ல வொண்ணாத பல்லாயிரம் கோடி ...** என்ற ஆண்டவர்களின் திருப்பாடலுடன் அவை மலர்ந்தது. ஆண்டவர்கள், பேசரும் பெரும் பொருளை பேசரும் வாசகம் கொண்டு அருளியதையே சொல்ல வொண்ணாத என்றார்கள். அம் முதன்மைப் பொருளே, சர்வத்தையும் படைத்த எழுதாத எழுத்து, கூறாத அட்சரம், எழுதாமறை, வந்த வேதம் என ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள். ஆசான் தன் இரக்கத்தால் அருளிய பிரம்மவித்தை செயல் மூலமே இந்த சோடசத்தை ஓத முடியும்.

ஆண்டவர்கள் அருளிய சோடசனிலை ரகசியமானது, தட்சணாமூர்த்தி, ஜனகாதிபர்கள் வாழ்ந்த காலம் முதல், குரு பரம்பரையாக ஒலிமார்கள் இருடியர்கள் ரிஷிகள் மூலம் நம்மிடம் வந்து சேர்வதையே கூறுகிறது. இறைவனை அறியக்கூடிய ரகசிய குறியீடே எழுதாத எழுத்து. இதில் உள்ள ஹயாத்து எனும் முதற் பொருளே, ஃ எனும் பிரம்மத்து ரகசியமாக உள்ளது. கொண்டுருளப்பதி என்பதே அருளப்பதியாக உள்ளது. மோனம் எனும் மெய்ன்னிலைப் போதமாகிய வேதம், சரசமுள நூலாகிய மெய்ம்மண ஞானத்துள் உள்ளது. கலிமா அட்சரத்தின் சிறப்பை கூறுவதே சோடசம். ஐந்தெழுத்தில் ஓர் எழுத்தாகிய நெருப்பின் அம்சமான ஜீவனைக் கொண்டே எழுதாத எழுத்தை அறிய முடியும். கைலாச வாசனின் திருச்சன்னதி அடைந்து ஸ்ரீமன் நாராயணனின் கொலுவாசனத்தில் போய் சேர்ந்திடவே இந்த மானிடச் சட்டை எடுத்தோம் என அறிவினை அறிந்தோர் கூறும் வாய்மையை அவர்களின் தயவாகிய அருளால் தான் அறிய முடியும்.


Copyright © AMNA Trust, Chennai

நம்மிடம் உள்ள லவணமெனும் நவ உப்பாகிய விஷம், ஆசானின் மணி மந்ர ஔஷதத்தால் அமுதமாக, கவனக் குளிகையாக மாறி, மவுன மாமணி மாடத்துள் ஏறி, நவமணிப் பதியாக மாறும் ரகசியத்தையே ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்:* சர்வத்திற்கும் தலையாக இருந்து, நடந்த, நடக்கும், நடக்கப்போகும் செயல் யாவற்றிலும் பிரதானமாக உள்ள பேசரும் பெரும் பொருளை ஆண்டவர்கள், ஞான அகவலில் **எழுதா தலீபி னெழுத்தறிவித்து** என அருளியுள்ளார்கள். வேதத்திற்கு உயிர் கொடுக்கும் ஆசான் அவர்களே வந்த வேதம். அணுவுக்கு அணுவாக மனுத் தலையுள் இருந்து சர்வத்தையும் படைத்து காத்து அழிக்கும் வஸ்த்து வித்தாக இருக்கும் எழுதாத எழுத்தின் இருப்பிடத்தை திறந்து அறிவதற்கான சாவி தீர்க்கதரிசிகளின் திருக்கரத்தில் உள்ளது. பிறவாமை பெறுவதற்கு என்றே வந்த மனிதனிடத்தில் குடியிருக்கும் இறைவனை அறிந்திட ஆசான் அருள் வேண்டும். அவ் அருளே நம் அறியாமை திரை கிழித்து பிறவிப்பிணி மாற்றிவைக்கும் மருந்தாக, 16 கலைகள் கொண்ட சோடசமாக உள்ளது. ஆண்டவர்களும், கொங்கண சித்தரும், உப்புப் பாண்டமாகிய இவ்வுடலில் உப்பின் தன்மையை ஞானமாக அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர் :* அன்னாட்டினுக்கே வித்தெடுக்க வந்த ஆசானின் வித்தில்லா வித்தே பேசரும் பெரும் பொருளாக உள்ளது. கூடகமான அவ்வெழுத்தே எதற்கும் முதலான ஹயாத்தெனும் நடுப்பொருளாக உள்ளது. ஒருருளை தேவரதமே, அருவுருவான விண்ணின் பாதமாக, தியானத்திற்கு மூலமான ஆசானின் திருவுருவாக உள்ளது. ஆண்டவர்களின் திருவாக்காகிய தீ, எதனையும் தன் மயமாக்கும் தீ போன்று நம்மையும் அழியாத பஞ்சாட்சரமாக மாற்றி பிறவாமையில் ஆக்குகிறது. இறைவனின் கஜானாவில் இருந்து நாம் கேட்டதும் கேளாததும் அருள்கின்ற கற்பகத் தருவின் ரகசியம் அறிந்தவர்கள் இன்று ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்ஙளாக உள்ளனர். தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 16-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

**குருபிரான் அருளமுதம்:**

**அறியவென்று மறைகளெலாம் அறைந்ந பஞ்ஞாட் சரத்தை...** என்னும் ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**னவக்கிரகக் கோள் மாற்றும் னாத சோதிடனா னிற்பர்...** நவக்கிரக கோள்களை மாற்றக்கூடிய வல்லபம் ஜோதிட நாவிற்கே உள்ளது. அதை குறித்தே **ஆடையிலே எனை மணந்த மணவாளா** என வள்ளல் பெருமான் அருளியுள்ளார்கள். அவரவரிடத்தும் அசையா நிலையில் நின்று ஆள்கின்ற ஒரு பொருளே ஆண்டவர்கள். நம்மாழ்வாரின் பெயர்களான சடகோபன், நந்தகோபன் என்ற நாமங்கள் கோகுலங்களை மேய்ப்பவரும், பஞ்ஞு பூதங்களையும் தன்னுள் அடக்கி ஆள்பவருக்குமான நாமங்களாகும். பெரியோர்கள் வந்து சொல்லும் சொல்லான மொழியே திருவாய் மொழியாகும். கோடியில் ஒன்று என்பது புதியதில் புதியது எனும், என்றும் புதியவனான இறைவனாகும்.

*ஜீவசகோதரி அஞ்சனா :* **உயர்வு அற உயர் நலம் உடையவன் எவன் அவன்... மனனகமலமற மலர்மிசையெழுதரும்... (நம்மாழ்வார்)** தன்னைவிட மேன்மை பொருந்திய, உயர்ந்த நற்குணங்களுள்ள, அமரரின் திருவடிகளை வணங்கி வழிபட வேண்டும். மனம் கடந்து, புலன் பொறிகளுக்கு அப்பாற்பட்ட ஒப்புவமையற்ற இறைவனே உயிராக உள்ளான்.

*ஜீவசகோதரி அன்னலட்சுமி:* **கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை ... (தாயுமானவர்)** கண்ணொளி காட்டும் மெய்ப்பொருளின் திருவருளை இரவும் பகலும் நாடும் மெய் அடியார்கள், அடியேன் தொழும் தெய்வமாவர். கடவுள் மனித தேகத்தில் மட்டுமே வெளிப்படுபவர் என்கிறார் தாயுமானவர். இருதயத்தில் விளங்கும் ஈசனை அறிவதற்கு இறை குருவின் துணை வேண்டும். மறைமொழி மாந்தரை காண்பதே தரிசனை.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி பாலஅபிராமி:* புற உலகம் சார்ந்த சிற்றின்பம் தீர்த்து, அகவுலக பேரின்ப நிலையில் ஏற்றி வைப்பவர்களே மெய்க்குருபிரான்.

*ஜீவசகோதரி வாசுகி :* **சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச் சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி... (விநாயகர் அகவல்)** சத்தம் பிறக்கும் இடமே இறைவனின் இருப்பிடம் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** *செவியானது சப்தத்தை பொதிந்திருப்பது போன்றும்* என ஆண்டவர்கள் அருளியுள்ள படி, சப்தத்தின் பிறப்பிடமாகிய ஆகாயமே இறைவனின் இருப்பிடம். அடி-முடி-நடுவின் தத்துவமே சிவலிங்கம். அதுவே சித்தத்தின் ரகசியம். நடுவறிந்து உரைப்பவர்களே சன்மார்க்க நாதர்.

*ஜீவசகோதரர் ஜெகன்:* **இருளாகிய (கு)வா** என்ற சத்தத்துடன் மானிட ஜென்மம் தொடங்கி மரணம் நோக்கி பயணிப்பதை, ஆசான் அருளால் அறிந்து அறிவில் தேர்வதே கடைத்தேற்றம். மனிதனின் மரண பயம் நீக்கும் செயல் ஒன்றுக்கே, ஈசனின் சக்தியுடன் மனித தோற்றத்துடன் நாசிக்கு வெளியே மூச்சு ஓடா நிலையுடைய தெய்வம் வேண்டும். தன்னுடைய புலன்களின் தீங்கிலிருந்து காக்க, அல்லாஹ்விடம் வேண்டுவதாக குர்ஆனில் உள்ளது. அகமியத்தில் அறிவுக்கும் மனதிற்கும் நடக்கும் போராட்டம் பற்றி கூறுவதே புராண கதைகள்.

> **இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்**
> **துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்**
> **சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே**
> **ஊராகக் கொண்டான் உவந்து                    (திருவாசகம்)**

ஆசான் அருளால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் நிலை பற்றி கூறுவதே இப்பாடல். பொய்யை நாடி அதை மெய்யென கூறும் மானிடசட்டை கொண்டவர்களிடம் விலகி இருப்பதே நன்மை.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேல்:* அகர உகரம் சேர்ந்த பத்தான இடம் அறியாதோரே ஏழைகள். **னெத்திப் புருவத்திடைச் சத்திச் சத்தர்தொழு முத்தி கைஇபலித சுத்தப் பழமைக்கிழ - முனிவோரே**. என சாலை ஆண்டவர்கள் புருவ மத்தியின் சிறப்பை அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் பாலசுப்பிரமணி:* ஆதி மார்க்க னீதி அவையின் செயல் உணர்ந்த அனுபவம்: ஜோதிக்கான இது ஜொலிக்கும் ஜோதி, அகரம் அடங்கிய அறிவுத்தேர், அகில வலம் வரும் அட்சாணி இல்லாத அதிசய தேர், அறம் எனும் அணிகலன்கள் பூட்டிய ஆதி தேர், ஊர் கூடி உலுக்கி இழுக்க முடியாத தேர், இது உலகையே உள்ளிழுக்கும் தேர்.

*ஜீவசகோதரர் பாண்டியன்:* கஸ்தூரி களப மணம் கொண்ட தெய்வக் கருவறையில் வைத்துப் பெற்றெடுத்த உன் ஆசானாகிய தேவ அன்னையின் அன்புக்கு முன், உன்னை நாற்றக் கருவறையில் வைத்திருந்து பெற்ற தாயின் அன்பு நிகராகாது.

**குருபிரான் அருளமுதம்:**
அறுசுவை கலப்பில் விளைந்த அறிவின் தன்மையை சீர் செய்யும் வல்லபம் ஆசான் ஒருவருக்கே உண்டு என அருளி தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

> *பிரியமுள்ள பார்வதி! எவர் மூன்று னேத்திர மின்றிய சாக்ஷாத் சிவமாயும், இரண்டு புஜங்ஙளையுடைய விஷ்ணுவாயும், னான்ஙு முகங்ஙளின்றிய பிரம்மாவாயும் இருக்கின்றாரோ, அவரே ஸ்ரீ குருவெனப்படுகின்றார்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai                                    

**20-07-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

**குருபிரான் அருளமுதம்:**
சொல்லரிய நால் வேதம் அங்கமாறும் என்பதின் வேத விளக்கத்துடன் குரு பெருமான் அவையை மலரச் செய்தார்கள். உயிர் சார்ந்த சூட்சுமத்தை மனிதனைக் குறி வைத்து வேத சாட்சியுடன் சொல்வதே சுருதி. சர்வத்தையும் துறந்து, சித்தர் முத்தர்கள் யாவரும் பெற்ற ஞானமே இன்று ஆதி மார்க்க நீதி அவையின் செயலாக உள்ளது.

**வான்மதிக் கொரல் - வாக்கியம் எண் 117, தொடர்ச்சி: நானடா நானிருக்கும் இடந்தான் காட்டி நவிலுவார் நன்மார்க்க நாதர் தாமே** என மாசில் சைவ மதி மகத்தாகிய சுப்ரமணியரவர்கள் அருளிய தீர்க்க தரிசன நாமம், நிலைத்த மதி கொண்டு பார்ப்பவருக்கே நிச்சயம் தெரியும். இந்த அதி சோபன சாலையின் அருளாட்சி வசந்தத்தில் மனுக்குலம் முழுதும் கூடிக் கொள்வதற்கே எமது இச்சையும் பூரண ஆசீர்பாதமும். வேதத்தாய் வரும் பொழுதே தீர்க்கதரிசனங்கள் உயிர் பெறுகின்றன. அகர முதலும் அவ்வு முதலும் கைக் கொண்ட அறிவினை அறிந்நோரே இவ்வாய்மையை அறிவர்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர், பாடல் எண்-23 : கள்ளர் பயமெனக்குக் கால்தூக்க வொட்டாமல்...** தீவினைக்கு உட்பட்ட நம் வஞ்ச பஞ்சபுலன்களே உயிரைப் பறிக்கும் கள்வனாக மாறி நம்மை எமன் கை வசம் சேர்க்கிறது. நம் விதியெழுத்தை மதியெழுத்தாக மாற்றும் ஆசானின் இரக்கம் ஒன்றே எமன் எல்லையில் நம்மை மீட்டு சிவன் எல்லையில் சேர்க்கும்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் - 9. விருந்தோம்பல்** உலக வழக்கிலுள்ள உணவெனும் விருந்தோம்பல் கடந்து, பெரியோர்கள் தான்பெற்ற ஞானத்தை வேத வேதாந்தங்கள் மற்றும் கோவில்கள் மூலமாக உண்டாக்கிய பரிபாஷை ரகசியங்களை, நின்றோர்கள் நிலை அறிந்து அருளும் குருவின் வாய்மையே விருந்தோம்பல். இதனையே புழுத்தலையை வைரத்தலையாக மாற்றி பிறவிப்பிணி போக்கும் னாத மருந்தாக வள்ளலார் கூறுகிறார்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* **திருஅருட்பா: ஓதாது உணர்ந்திட ஒளியளித்து எனக்கே ஆதாரமாகிய அருட்பெருஞ்ஜோதி.** வேதங்களைப் படிப்பதன்றி, பழகியே மெய்யுணர்வு பெற முடியும். **ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்** என அவ்வையாரும், **ஓயாமல் படிக்க ஓங்கும் உணர்வு, வேதம் ஓதுதல் மெய்வழி தொடர, ஓதுவதே எழுதாத எழுத்ததை** என சாலை ஆண்டவர்களும் அருளிய படி எழுதாத எழுத்தாகிய மோன எழுத்தை ஓதாது ஓதுவதற்கு கோதிலாத குருவே துணை.

**குருபெருமான் அருளமுதம் - தெய்வத் தேடுகூடகம், தொடர்ச்சி:** மாறா சத்திய நகரமான மெய்வழிச் சாலை, அவரவர் அகத்திலும் தேடிக்கண்டடைய வேண்டிய பொருளாக உள்ளது. பிரம்ம கூடகர்கள், குரமாதுவிடம் குறி கேட்டு, பசுக்களோட்டும் கோகுலர்களை சந்தித்து, மனுமகன் இருக்கும் எல்லை கேட்டு, காஷாயக் கொடி கண்டு, துவாரபால அரசர்களை சந்திக்கிறார்கள். இவை யாவும் அகத்தில் அறிய வேண்டிய அகமிய ரகசியங்களாக உள்ளது. ஆசானின் வாய்மையெனும் உயிராகிய தமிழே நம் மூன்றாவது கண் திறப்பித்து, சிதம்பர ரகசியம் காண வைக்கிறது என்பதனை இன்று செயலாக அனுபவிப்பவர்களே ஆதிமார்க்க நீதி அவையின் அங்கங்கள் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபெருமான் அவையை நிறைவு செய்தார்கள்.

*எவருடைய அனுக்கிரஹத்தால் ஜீவர்கள் விசித்தமான சம்சாரத்தினின்றும் மோக்ஷத்தை அடைகின்றார்களோ, அவரது கிருபை கடாக்ஷித்தற் பொருட்டு என்னால் இவ் வஞ்ஞலி செய்யப்பெறுகின்றது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**22-07-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**குருபெருமான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து...** எனும் னல்ல னாட் பிறப்பு செய்யுளின் காப்பு பாடலுடன் அவை மலர்ந்தது.

வந்த வேதமாக விளங்கும் பெரியோரின் உளம் சரி என சம்மதித்த சரியான சரினிலையே சாலை வாழ்வாகும். அறியாமையால் பக்தி என்ற பெயரில் காசி, கங்கை சென்று வணங்கும் புற வழிபாட்டால் வீணாவது நம் வயதும் வாழ்நாளுமே. ஆசான் அருளால் அக வழிபாட்டில் அகமியத்தில் ஆகாய கங்கையில் அரும்புனல் நீராடி, ஜீவனாகிய சிவலிங்கத்தை தரிசிக்க வைக்கும் ஆதி மார்க்கமே மெய்வழியாகும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 135:** அன்னியமாய், சத்துருவாய் இருக்கும் உன் மூச்சை உன் சொற்படி கேட்கச் செய்யும் ஆசானிடம் அன்னியமின்றி இருந்தால் உன் சுவாசம் அன்னியமின்றி உன் சொற்படி கேட்கும். மெய்ன்னிலை கண்டு எங்னெங்னும் உள்ள ஆசான் சொல்லுக்கு இணங்கி நடந்து, தன் பழைய பாவ எண்ணங்களால் எமன் எல்லை நோக்கி ஓடும் சுவாசத்தை மாற்றி, தன் சொற்படி கேட்க வைக்கும், அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்த செயல் கைவரவு ஆனவர்களே அனந்தர்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் - எபேசியர் 2 : 3,4,5** *ஐஸ்வர்யமுள்ள தேவன் தன் இரக்கமிகு அன்பால், முற்காலத்தில் அக்கிரமத்தில் மரித்திருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்து, தனது கிருபையினால் இரட்சித்தார்.*

மாம்ச இச்சையுடைய மனம் விரும்பிய அக்கிரமத்தில் மரித்தோரை, கர்த்தராகிய குருபிரானே பரிசுத்த ஆவியினால் ஊதி உயிர்ப்பித்து, செவிச் செல்வமான ஐஸ்வர்யம் வழங்கி, அறிவுத் தெளிவில் இருத்தி, தனது தயவான கிருபையால் நித்திய ஜீவனை அளித்து காத்து ரட்சிக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

ஆதியே வந்து ஓதும் இறுதி னீதியானது, நம்மை ஊனப்படுத்தும் காலச் சக்கரமெனும் நவக்கிரகங்கள், வஞ்சப்புலன்-பொறிகள் மூலம் பேதப் பிறப்பில் ஆக்கும் கருமத்தை ஈடழித்து, சுத்த புனர்ஜென்மத்தில் படைத்து சாவாவரம் அருள்கிறது.

*ஜீவசகோதரி ஜீவிதா :* **கயிலாய கம்பளிச்சட்டை நாயனார் - முன் ஞானம் - பாடல் எண் 7: ஓங்கார முதற்கொண்டைந் தெழுத்தோ டாறும்...** ஆசானின் ஓங்காரத் தொனியே ஆறு ஆதாரத்தையும் பஞ்சாட்சரத்தையும் உள்ளடக்கிய பேசரும் பெரும் பொருளாகும். **அ, உ, ம்** எனும் விழிப்பு, கனவு, ஒடுங்கும் மௌன நிலையான **ஓம்** எனும் பிரணவத்தின் சொரூபமே ஆசானின் நாதம். அதுவே நம்மை உணர்ச்சியில் இருந்து மாற்றி உணர்வு - மெய் உணர்வு - உணர்வு உகாரரகிதம் எனும் பேரானந்தப் பெருனிலைக்கு ஏற்றி வைக்கிறது.

**குருபிரான் அருளமுதம்:**

மனிதனின் ஜீவாதார ஆட்டமாகிய மருவிய காலக் கணக்கை மாற்றும் அதி வல்லபச் செயல், பெரியோர்கள் கையகத்தில் உள்ளது. சாலை ஆண்டவர்கள் *பூரணப் புதையல் - ஏறுதுறை மறைவுலக்கப் பாடலில்* இதன் ரகசியத்தை பரிபாஷையாக அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **மனித பரிணாம வளர்ச்சி:** மனிதன் கண்டுபிடித்த பொருட்கள் யாவற்றாலும் நன்மையை விட தீமையே அதிகம் உண்டாகிறது. உயிர்காக்கும் மருந்துகள் வந்தாலும் நோய்களின் வீரியமும் கூடுவதே நிஜம். ஆக்கத்தை விட்டு அழிவை உண்டாக்கும் கண்டுபிடிப்புகள் அறிவின் வளர்ச்சியா அல்லது அழிவின் வளர்ச்சியா என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

*ஜீவசகோதரி சரஸ்பதி:* அரச அந்தஸ்துடன் சுகமான நாடாளும் காலம் முடிந்த அரசன், கஷ்டமான காடாளும் காலத்தை தன் கூர்மதியால் சுகமாக மாற்றிக் கொண்ட கதை போல்,



Copyright © AMNA Trust, Chennai

மெய் ஆசானின் கூர்மதியெனும் நாதம் கைக் கொண்டவர்கள், வாழும் போதே துக்க உடல் நீக்கி, சுகவுடலான புகழுடம்பில் குடியேறிப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத் தேடு கூடகம் :**
பிரம்ம கூடகர்கள், மானிட சட்டை இட்டவர்களையே சந்தித்து வந்த போதும் யோவா, யோசுவா, எஸ்க்கிலாசு, ராமதேவர், தனியேல், பராசரர், மூசானபி, ஏசுநாதர், கிரேக்கரிஷி, அருட்பா வள்ளல் ஆகியோரைக் கண்டதாகவும், அவர்கள் உரைத்ததாகவும் கூறும் காரணத்தை குருபெருமானின் பெருங்கருணையால் மெய்யுணர்வைப் பெற்றே அறிய முடியும் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து, தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**23-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

*ஜீவசகோதரி பொன்லட்சுமி:* **வேதகலைக் கதிபதி ... அருளென (ஆதி மான்மியம்)** மனிதனை எமன் அணுகாது காக்கும் ஒரே ஒரு செயலுக்கே எல்லா பாஷைகளிலும் ஞானம் உண்டாயிற்று. ஒரு தலைமுறை காலம் நம் இருதயத்தில் குடியிருக்கும் இறைவனை, இதய இருள் நீக்கி தரிசிக்க வைப்பவரே குரு. அவ்வாறு காருண்ய திருமேனி தாங்கி வரும் குருவின் துணைகொண்டே ஒருவன் தன் வஞ்சப்புலன் சதிகளை வெல்ல முடியும்.

*ஜிவசகோதரர் கருப்பசாமி:* மெய்ஞான அறிவாகிய புதையல் என்பது ஒரு மெய்குருவை தேடி அடைந்து அறிவு பிரகாசமாகும் போதே கிட்டுகிறது. ஜீவன் கண்ட சாதி மனுக்குலமாக, இன்று ஆதி மார்க்க னீதி அவையின் அங்ஙங்கள் திகழ்வது பிரத்தியட்சம்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:* **உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்** என்ற ஔவையார் வாக்கின்படி, பாரவான்களாக அவதரித்து வரும் பெரியோரின் கருணையைப் பெற அவர்களின் வாய்மை துலக்கத்தில் ஆகி தன்னையறிதல் எனும் செயல்பழகி னம் தேகத்தில் இருக்கும் இறைவனை அறிய வேண்டும் என்பதே மனுவின் தலையாய கடமை.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:* குருபிரானாகிய தாயின் அருளமுத உன்னதமே, மெய் உணர்வை ஊட்டி நம் ஆறாவது அறிவை துலங்க வைக்கிறது. மூலமந்திரம், மகா சங்கல்ப மந்திரம், பாதபூஜை இவற்றை செயலாகக் கொண்டிருக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் பாக்கியவான்கள் என்பது சத்தியமே.

*ஜீவசகோதரர் முருகேசன்:* **நான், பசு, ஜீவன், சிற்றணு வடிவினன்...** என்று வள்ளலார் கூறுவது போல், நாம் இந்த அழிவுடல் அல்ல, அழியாத்தன்மை கொண்ட ஆன்மாவே நான் என்பதையும் இவ் அவையின் மூலம் அறிந்து கொண்டேன்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* ஐவழி விளைவுக்கு அப்பால் இருப்பதே மெய்வழி, இதுவே நாம் வாழ்வதற்கான ஒரே வழி. மெய் குருபிரானாக வரும் ஒருவரின் இரக்கத்தால் அவரை அறிந்து அவர் கூறும் நல்வழியில் நம்பிக்கையுடன் நடப்பதே நாம் உய்வதற்கான வழி.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* இரை, இணை, இருப்பிடத் தேவை மட்டுமே கொண்ட ஐயறிவு ஜீவபேதங்கள் கடந்த, மனிதன் ஒருவனே தன்னை அறியும் அறிவை பெற்றவன். அழிவை நோக்கியே செல்லும் மனம் கொண்ட மனிதன், தனக்கு வயது தந்ததின் பிரயோஜனம் மெய்ப்பால் அறியவே என்பதை அறிந்து கொள்ள, அதனை அறிவிக்க வரும் மெய்குருவின் இரக்கமும் கருணையுமே துணை.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* நம் அன்றாட வாழ்வில், மனதிற்கும் அறிவிற்கும் உள்ள வித்தியாசம் அறியாத நம்மிடம், ஞானமெனும் அறிவைக் கற்றுக் கொடுப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும். தாசமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சன்மார்க்கம் என சமயக்குரவர்கள் நால்வர் அருளிய மார்க்கங்கள் யாவும் பிறவாமை பெறுவதற்கே. முற்றோதல்



Copyright © AMNA Trust, Chennai

என்பது வேத மந்திரங்களை படித்து, பதிகம் பாடுவதன்று. ஆசான் அருளால் அழியாத மெய்ப் பொருளறிந்து உணர்ந்து ஓதும் மெய் வணக்கமே முற்றோதல் ஆகும் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 27-07-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய னாயக மென் குருவின்...** எனும் ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 118:** எமன் கையில் சிக்க விடாது காக்கும் செயலே தர்மம். அதனை தவராஜராகிய குரு கொண்டல் அவர்களே செய்ய முடியும். நம் தலை காக்கும் அழியாத செல்வத்தை கொடுக்கும் தர்மமே ஈகை என்பதாம். அதனை அருளும் தவராஜர்களிடம், இணங்கிய சுபாவமும் எதார்த்த உள்ளமும் கொண்டோருக்கே, அவ்வருள் கிடைக்கிறது. அத் தர்மமே சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனலாக இருந்து நம்மை வாழ வைத்துக் கொண்டு இருக்கிறது. ஆதி மார்க்க நீதி அவையின் மக்கள் இந்த நிதர்சன உண்மையை உணர்ந்தவர்களாக உள்ளனர். சாங்நு கோள் கடந்த ஞானிகளுக்கும் அருளும் மெய்வழி ஆண்டவர்களே தனித் தலைமைப் பெரும்பதி எனும் நாமத்திற்கு உரியவர்கள்.



**மெய்வழிச்சாலை:** சாலை எனும் மெய் மேனி பிறந்து வரும் வழியானது, வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல் என்பதாக அவர்களின் அருளமுத வர்ஷிப்பாக உள்ளது. தீர்க்க தரிசனங்கள் சொன்ன நாமங்கள் இன்றளவும் அப்படியே இருந்தாலும், தூலத்திருமேனியை மறைத்துக் கொண்ட பெரியோரை, கன்னி விராட்தவம், நித்திய பதவி பெற்றார்கள் என்றே சொல்கிறோம். இஸ்லாத்தில் நம் கால்படும் மண்ணில் மறைத்தவர்களை வணங்கக் கூடாதென்ற கோட்பாடு உண்டு. கால் மேலும் தலைகீழுமாக உள்ள அந்தர் முக பயணத்திற்கான நாமமாக விளங்குவதே சாலை.

**ஜவனத்தளிர் - காப்பு பாடல் அரியானை அறிய வைத்து...** அரியானை (இறைவனை) தெரியாது இருந்தவனை (தெரியானை) பெரியான் எனும் விஸ்வரூப நிலை கொண்டு ஆன்மாவை காட்டித் தந்தருளும் சாலை வாழ்வே காப்பு என அருளியுள்ளார்கள்.

**பூரணப்புதையல் : ஏறுதுறை மறைவுலக்கப் பாடல்கள்: ஒன்பதுக்கு ஒன்பது மூன்று லட்ச லக்கம்... ஆமெனவு மீரா றிலக்கத்தோடு...** மேற்படி பாடல்களில் உள்ள கணக்கும், அதன் ரகசியங்களும் அறியாதவனை பாவியென வேதம் சொல்வதாகவும், இதன் கணக்கை ஒரே காலாக தன்னிடத்தில் அறிந்து கணக்கு உரைத்தவர்கள், மூமீனாம் ஞானபிதா மகனுமாவான் எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மேற்கண்ட இரண்டு பாடல்களின் பரிபாஷையின் ரகசியங்களை தன்னை அறிந்த பெரியோர்களின் இரக்கத்தாலன்றி எங்கும் எவரும் எக்காலத்தும் அறிய இயலாது என்பது சத்தியமே. இதனை ஆண்டவர்கள் **தன்னை அறிந்நவர்கள் எண்ணி இரங்ங வேணும் தன்னால் அறியத் தம்பி உன்னால் முடியாதப்பா** எனவும் அருளியுள்ளார்கள். ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் மேற்படி பாடல்களின் பரிபாஷை ரகசியங்கள் யாவற்றையும் செயலாக உணர்ந்தவர்களாக உள்ளனர் என்பதற்கு அவர்கள் இந்த அவை நிகழ்வுகளில் வேத சாட்சியாக பகிர்கின்ற விஷயங்களே சாட்சி.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம்:**

இடும்பு அறுபடாத ஜென்மத்தினருக்கு இடும்பை அறுத்து திடம் தரக்கூடியதையும், தேடுதல் நிறைவேறும் செயலையும் செய்கிறார்கள் பிரம்ம கூடகர்கள். ஆசானின் திருப்பாதத்தை மறவாதவர்கள் தாங்கள் எங்கிருந்து வந்தார்களோ மீண்டும் அந்த எல்லைக்கு செல்கிறார்கள். அவர்கள் பாவி என்ற நாமம் போய் ஜென்ம சாபல்யம் பெற்று மனுவிலிருந்து தேவனாகி பிறவா நெறி பெறுகிறார்கள். அதை நோக்கியே இத்தேவ நடனம் நடைபெறுகிறது. வேத, வேதாந்தங்கள் எல்லாம் ஒரே பொருளான ஏகாட்சரத்தை வைத்தே சொல்லப்பெற்றுள்ளது. அவ்-வித்து தான் எல்லாவற்றிலும் தலையாக உள்ளது என குருபிரான் அருளியதை தொடர்ந்து, தெய்வ தேடு கூடகத்தில், இருடியர், குரமாது, தாத்தா இவர்களை தேடு கூடகர்கள் சந்தித்த பின், பிரம்ம கூடகர்களாகி, அதன் பின் கோகுலர்கள், துவார பாலகர்கள், இளங்கோவலர், பஜனையர், முமூச்சுமார், கலைவல்லார், காயாபுரி கோட்டையர், சத்தியப்பிடி மூப்பர், தலைமை மந்திரி உட்பட ஒன்பது மந்திரிமார்கள் மற்றும் அனந்தாதி தேவர்களையும் சந்தித்த நிலைகளை ஆண்டவர்கள் அருளியுள்ளதை ஜீவ சகோதரர் தியாகராஜன் பகிர்ந்ததை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## 29-07-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

**திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** எனும் குருமணி மாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 136: இலிங்கம்:** பாவங்களை சங்கரிக்கும் சர்வ வல்லமையும் நிறைந்த தேவ ரூபம் சத்திய ரூபக தீபம்.

ஓரெழுத்து மாத்திரை கோல், ஓசை கொண்ட திருநடனம், கடல் முரசு, செந்நெறிச் சீர் உழவுகோல் என இலிங்கத்தின் சிறப்பை ஆண்டவர்கள் பலவாறாக அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம்: கோலோசியர் 2:13, 3:10** *உங்கள் பாவங்களாலும், மாம்ச விருத்தசேதனம் இல்லாமையாலும் மரித்தவர்களாக இருந்த உங்களையும் அவர்களோடு உயிர்ப்பித்து, உங்கள் அக்கிரமங்கள் யாவற்றையும் மன்னித்து, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையும் படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.*

உயிர்ப்பித்தல், மறுபிறப்பு என்பது அறியாமையிலிருந்து அறிவுப் பிறப்பிற்கு கர்த்தரின் கருணையால் மூன்றாவது கண் திறப்பிக்க பெறுவதுவேயாகும். இறைவனின் சாயல் என்பது அறிவு பிறப்புக்கான தொனியாக உள்ளது. இதனையே **ஆதியிலே வார்த்தை இருந்தது அது தேவனிடத்தில் இருந்தது அது தேவனாகவே இருந்தது** என சத்திய வேதத்திலும் நரன், மனு, தேவன் எனும் அடையாளம் அவரவர் வாக்கினால் அறியலாம் என்பதனை, **நானிலம் தனிலே இங்கு னர ஜென்மம் எடுத்தோரெல்லாம்...** என்ற பாடல் மூலம் மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளதையும் அறியலாம்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை - விபூதி யோகம்: சாவாது பிறவாது தனி முதலாக இருந்த நான் ..... யுகந்தோறும்**. சாவாது பிறவாது தனி முதலாக இருந்த **நான்** எனும் தேவரூபம் வந்து அறிவித்த பின்னரே **நான்** என்பதன் உண்மைப் பொருளை நாம் அறியமுடியும். காலன் கையிலிருந்து மீள்வதும், வெளிச்சப் பொருளான மூன்றாவது கண் பெறுவதுமே விபூதி யோகம். பஞ்சாட்சரம், திருநீறு, வெந்நீறு, புகையாத கனல், சுடாத தீ, ஆலவாயன் திருநீறு என பல நாமங்கள் கொண்ட கங்காளன் பூசும் கவசத்திருநீறே, என்றும் மங்காத **நாவினால் சுட்ட வடு** என்பதாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** மும்மூலம் எனும் வினையினால் வரும் ஜீவனாகிய **நான்** வினைஅறும்போதே பிறவாமை பெறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை நாயனார் பாடல் எண்: 8 ஒத்து நின்ற ஓங்காரம் மண்ணை உண்ணும்...** மானிட உடலை இயக்கும் பிரணவப் பொருளே ஓங்காரம். நம் தேகத்திலுள்ள நித்திய பஞ்ச தன்மாத்திரைகள், மாறாத பஞ்சபூத குணங்கள் பற்றி அருளும் பெரியோர்கள், ஐந்து எழுத்து மந்திரத்தில் பிறந்த மனிதனின் குணம் மாறிக்கொண்டே இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். தேவ பதத்தை அருளும் ஐந்தெழுத்து மந்திரத்தையே, **தேவராய் பிறக்க தேரைந்து மந்நிரம்** எனவும், **ஐந்தெழுத்து மந்நிரம் உன் இல்லமாமே** எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி சரஸ்பதி:* ஒரு மெய்க் குருபிரான் அருளால் மெய்யை பெற்ற பின்பும் அதை விட்டு விலகி செல்பவர்கள், நிமிர்த்த முடியாத நாய் வாலுக்குச் சமம் என்பதே நிஜம்.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம்:** எவ்விதத்திலும் வின்னமில்லாத எனும் குற்றமில்லாத வாக்கே இறைவனின் சாயல். அது நின்று விளங்கும் எல்லையே மெய்வழி ஆண்டவர்கள் தங்கள் செயலால் நின்று உலாவிய இடமான இராப்பகலற்ற மெய்வழிச்சாலை. பிரம்ம கூடகர்களிடம் தேடி வந்த இடத்தின் அடையாளம் பகிர்ந்தவர்கள் யார் என கேட்டதின் பதிலாக அவர்கள் கூறிய **சொற்சத்தி தாய்** என்பதன் உண்மைப் பொருளின் சிறப்பை, ஆசான் அருளால் நாம் அகம் சார்ந்து வாழும் போதே அறிய இயலும். தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

### 30-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய, **முன்னுரு தங்குர சிக்குல மாமணி என்னித யப்பெருமான் ...** எனும் திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம் :* அசைவற்ற மனமே சூக்குமம். அவரவரும் தன்னுள் விளங்கும் அகமிய ஆலயத்தை அறியவே கோவில்களும் வேதங்களும் உள்ளன. இதன் உண்மையை உணர்த்த வரும் மெய் ஆசானின் வாய்மையே வந்த வேதம். முன்னுரு எனும் காரண தேகமே னினைவாக, பிரம்மமாக உள்ளது. அன்னவராக வரும் ஆசான், நம் ஆணவ மலத்தை ஒழிக்கும் போதே, அறிவுத் துலக்கம் பெற்று, அன்னவராக இருந்த ஆசான் மன்னவராக நம்மை ஆட்கொள்ள வந்த தன்னவர் என்பதை அறிய முடியும். அந்தகரண கூட்டத்தில் அகங்காரமே முதலாவதாக வெளிப்படுகிறது. இதன் தத்துவமே பாற்கடலில் பள்ளி கொண்ட கரியமால் உந்தியில் உதித்த பிரம்மா. ஆசான் அருளால் அகமியத்தில் சூக்குமத்தில் குடியேறியே நித்திய சுகம் பெற முடியும். வாமன ரூபமாக வரும் காமீலாகிய ஆசான் அவர்களே, தங்களின் இரக்கத்தால், காலம் கடந்து நிற்கும் சர்வத்தையும் படைத்த வஸ்த்து வித்தான இறை பொருளுடன் நம்மை சேர்த்து வைக்கிறார்கள்.

விகார மனம் கொண்ட மனுவை நிர்விகார இறைநிலையில் ஆக்குவதே பாரவான்களின் நோக்கம். இல்லற வாழ்வில் இருந்து கொண்டே, யாவற்றையும் கட்டி ஆளும் மனதை அடக்கி, பேரின்ப வாழ்வை கைப்பற்றுவதே துறவு. புற வாழ்விற்கு சாதகமான மனம் அக வாழ்விற்கு பாதகமாகவே உள்ளது. ஒரு மெய்ஆசானின் துணை கொண்டே மனதை அகவாழ்வில் சாதகமாக மாற்ற முடியும். னரனாய் வந்தவன் நரனாகவே மடிவதைக் கண்டே **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்** என்கிறார் வள்ளலார். நரனை மனுவாக்கி தேவனாக்கும் ஆசான் அவர்களே அருட்பெருஞ்ஜோதி. அவர்களே கலம் கொண்டு எழுதா எழுத்ததை ஓதுவதற்கான பிரம்ம ரகசியத்தை அருள்கிறார்கள். சமத்துவம் சமாதானத்தின் உயிரொட்டிய ரகசியத்தை அறியும்போதே தச அவதாரங்களின் உண்மை நிலை உணர முடியும் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*குகாரம் குணாதீதமும், ருகாரம் ரூபனீங்கியதுமாம். குணாதீதத்தினையும் அருவத்தினையும் எவர் தருகின்றாரோ, அவரே குருவெனப்படுகின்றார்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**30-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**துறந்த மனத் தனி யோகருளத்தில் பூக்கும்...** என்ற அமுத கலைக் ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* **அறம் செய்ய விரும்பு.** களிம்புடலில் பெருமை தேடி அலைந்து, துக்கம், பயத்துடன் வாழும் மனிதன் ஒரு மெய் குருபிரான் அருளால் நித்திய சுக வாழ்வில், தன் எனும் ஜீவ குகையில் குடியேறி வாழ்வதே தவமாகும். அவரவரிடத்தும் அறம் செய் வீடாக விளங்கும் ஜீவன் அலையாமல் பாதுகாத்து மனம் தெளிந்து பேரின்பம் அடைவதே இல்லறமாகும். தூல உணர்வு விட்டு ஜீவான்மாவில் கலப்பதே துறவறம்.

*ஜீவசகோதரி சண்முகப்ரியா:* **ஓங்கி உலகளந்த... (திருப்பாவை)** வாமன அவதாரத்தில் மகாபலியின் கீழான நோக்கத்தை சங்காரம் செய்து, மேல் நோக்காக்கும் செயல் கூறப் பெற்று உள்ளது. தூல வாசனை விட்டு ஜீவதேகத்தில் பாய்ந்து எமனை தன் வசப்படுத்தி மிதித்து ஏறும் செயலே ஓணம் பண்டிகை. திருவெனும் வலம்புரிச் சங்கே அசைவற்ற அனாதிக் குன்றாக, மரணம் மாற்றும் வாணிநாடாக உள்ளது. மக்களின் அறியாமை விலக்கி, கலி தீர்த்து மனுவை தேவனாக்கும் செயல் இன்று ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக உள்ளது.

*ஜீவசகோதரி மகிமா:* தான் எல்லாம் அறிந்தவன் என எண்ணுபவனே பொய்யின்ப உணர்ச்சியால் மெய்யை மறந்த நரன். ஒரு சற்குரு பிரானை சந்தித்து சரணடைவதே அறிவு செல்வத்தை பெறும் வழி. அவர்களின் அன்பு கொண்டே சதாசிவமாக, ஓசை ஒளியாக உள்ள இறைவனை அறிந்து கைலாய பிராப்தி பெற முடியும்.

*ஜீவசகோதரி ஸ்ரீமா:* இறைவன் வகுத்த னீதியை உணர்வது மனிதன் ஒருவனே. விதியை வெல்லும் மதியை ஆசான் அருளால் பெறுபவனே மனு. ஒழுக்கமுடன் பழகும் சாகாக் கல்வியையே வள்ளலார் அருளியுள்ளார். பிறவிச் சூழலில் சிக்குபவன் ஐயறிவு நுகர்ச்சியில் வாழும் நரனே. ஆசான் அருளால் அகமியத்தில் அறியாமை அகன்று அறிவாக மாறும் நின்றதொரு பிரளயத்தை கைக்கொண்டவனே நித்திய உடல் பெற்ற மனிதன்.

*ஜீவசகோதரி அருணா:* இறைவனின் சிருஷ்டியில் மனிதன் ஒருவனுக்கே ராக ரகமான சப்தம் உண்டு. மனித ரூபத்தில் வரும் இறைவனின் ஓரிதழ் தாமரையே, கமல பீடம், திரு நடனம், தேவ நடனம், பஞ்சாட்சரம், கடல் முரசு என வேதங்கள் கூறுகின்றன. வஹியாக வரும் குருபிரானின் வாக்கே ஆங்கிரஸ் எனும் அக்கினி என்கிறது உபனிடதம். னாராயணா எனும் நாமத்தின் பிரகாசமே நம் அறியாமை அகற்றும் வாடாத தீபம். வினையினால் உண்டான உடலின் வினைதீர ஆசான் இடத்தில் பழகும் கல்வியே இல்மு எனும் சாகாக்கல்வி. நெற்றிக் கண்ணும், ஆருயிரின் நிலையும், காலக்கணக்கும், அறிவிருக்கும் தலமும் காட்டி, விதியை மதியாக்கி குன்றாத பெருவாழ்வு வாழ வைக்கும் குரு பெருமானின் அருளாலே அவர் தாள் வணங்கி வாழ்வாங்கு வாழ்வு வாழ்வோமாக. தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**09-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**விடிந்தது நல்ல நாளும்...** என குருபிரானின் திருவாய் மொழியுடன் அவை மலர்ந்தது.

**பெற்ற தும்பிற வாமை யுற்றதும் ... பேறு பெற்றவர் மாறு பட்டில ரென்று னான்மறை பேசுமே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் குருபிரானின் வழி காட்டுதலுடன் ராக தாளத்துடன் பயிற்றுவிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**16-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **அரக்கர் வானவர் மனுக்கள் யாவரு மலைந்த லைந்தின்னும் காணொணா ... போனவர் மீண்டு இங்க வந்திலர் போதை கன்னிம ணமிதே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் ராக தாளத்துடன் பயிற்றுவிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**23-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**அழியா பதிக்குடியேறிய...** என்று தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**செந்நிலதத்தின் னந்தி யின்கொலு சேவை சேர்வையின் றன்னிழல் .... விதியென் றெல்லையிற் றிரும்பி வந்தவர் மேதி னிதனி லில்லையே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் ராக தாளத்துடன் பயிற்றுவிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**30-07-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**அயினெனும் பொருப்பி னங்ஙனோர் கூற்றும்... என்ற குருமணிமாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.**

**விட்ட தோர்குறை தொட்ட தோர்குறை விதிம தியென ரெண்டதில் ... விட்டது பிறவிப்பிணியென்ற சட்ட மேகிழி பட்டதே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் ராக தாளமுடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

## குரு வாழ்க !     குருவே துணை !!

*சற்குருவின் மேலான வடிவத்தினை விவேகக் கண்ணுடையோர் னேரிற் காண்பர். மந்நபாக்கிய முடையவர்கள், குருடர் சூர்யோதயத்தைக் காணாதது போற் காணார்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின்
## 2023 – ஜூலை மாத அவை னிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **July 2023 / சிவகாசி** | குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர் பாதத்துடன், ஜீவசகோதரர் சாலை கணேசன் (சிவகாசி) அவர்களின் முதலாம் ஆண்டு பூர்த்தி, ஆதி மார்க்க னீதி அவை சிவகாசி அங்கத்தினர்கள் முன்பாக நிறைவு பெற்றது. |

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்


| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **02/03-09-2023 / சென்னை** | குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்களின் முன்பாக, அவர்களின் ஆசீர்பாதத்துடன், ஜீவதம்பதியர் வாசு-லாவண்யா அவர்களின் புதல்வி **லதாங்கி** மற்றும் ஜீவதம்பதியர் வெங்கட்ராமன்-பாரதி அவர்களின் புதல்வன் **அஜய் கிருஷ்ணன்**, இவர்களது திருமணம், ஆவடி வள்ளுவர் வாசுகி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. |
| **10/11-09-2023 / பொள்ளாச்சி** | குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்களின் முன்பாக, அவர்களின் ஆசீர்பாதத்துடன், ஜீவதம்பதியர் காளிதாஸ்-தபேஸ்வரி அவர்களின் புதல்வன் **பரணிதரன்** - மணப்பெண் **தரணி ஸ்ரீ**, இவர்களது திருமணம் பொள்ளாச்சி, ஸ்ரீ சாய் மஹாலில் நடைபெற உள்ளது. |
| **10-09-2023/ சென்னை** | குருகொண்டல் சாலை ரவி அப்பா, அவர்களின் ஆசீர்பாதத்துடன், ஜீவசகோதரி சாந்தி மோகனகோட்டி அவர்களின் புதல்வன் **பிரவீன்** - மணப்பெண் **திவ்யபாரதி**, இவர்களது திருமணம் சென்னை, வடபழனி ஆண்டவர் திருக்கோவிலில் நடைபெற உள்ளது. |
| **18-09-2023 / சிவகாசி** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் அருளமுத வர்ஷிப்புடன், வினாயகர் சதுர்த்தி சிறப்பு அவை சிவகாசியில் நடைபெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai 

## உற்றெழுத்து உணர்த்தல்

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் செப்டம்பர் 05ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.



**இடமிருந்துவலம்:**

1) ஓதும் ______ 2) _______ முடினடுவும் 3) ______ னக னட்பாக 11) _____ லகதி
16) ______ நமேசிந்நை 18) _______ ம்பொருளுமின்பம் 19) _______ குலமுமெது
21) _______ காலுச்சி

**வலமிருந்து இடம்:**

4) ______ மானந்நவண்ட 5) தாறுமாறாக வரும் னே_______ து 6) வந்நவ _______ கசபை
7) னாதன் ______ னிதிமுன் 13) வாக _______ முகடேறி 15) அதிபா ______
17) _____கோடிவீசும் 22) சங்நை பொருந்நும் ___________

**மேலிருந்து கீழ்:**

1)______ பிரளய 2) ______ உகர 3) ______ ந் நெய்வப்பதியே 11) ______ மையெனும்
14) ______ வேதம் 16) ______ நெழுத்தை 18) _________மசங்நிடா

**கீழிருந்து மேல்:**

8) _______ மெனும் திக்கீருடனே 9) ______ தானே வாய்கொண்டு 10) _______ணியபொய்
12) பனிமலையின் ______ வாசம் 15) ________ தேடிவைத்திருக்கும் 19) ______ குறைந்நிடா
20) ______ னிலை கண்டு 21) ______பேசி வயிறு 22) காமீல் பதத்தைப் ______



Copyright © AMNA Trust, Chennai

**2023 ஜூலை மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

இன்பலதா
மாதவன்
ஸ்ரீமா
மகிமா
வளவன்
சுந்தர்
மஞ்சுநாதன்
சபிதா
வடிவேலன்
தனராஜன்
ஜெயப்பிரகாஷ்
செல்லம்மா
புன்னகை
பாஸ்கர்
உமாராணி
ராஜமகேஷ்
தியாகராஜன்
வஜ்ரவேல்
மகேஷ். மதுரை
மோகன். ஸ்ரீபெரும்புதூர்
கார்த்திகேயன். ஆவடி
அஜய். சிவகாசி

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**


Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ளிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 25 - Month: August 2023*



Copyright © AMNA Trust, Chennai